தினமலர்
புதுச்சேரி | வியாழன் | 3.7.2025

# உருவாக்கம்

## • ஜிப்மரில் 557 புதிய பணியிடங்கள்...
## • மத்திய சுகாதார அமைச்சகம் அனுமதி

**புதுச்சேரி, ஜூலை 3–**

**ஜிப்மர் மருத்துவமனையில் 557 புதிய பணியிடங்களை உருவாக்கவும், நிரப்பவும் மத்திய சுகாதார அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது.**

டில்லி எய்ம்ஸ் மருத்துவமனை போன்று தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஜிப்மர் மருத்துவமனையும் விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது. புதுச்சேரியில் மட்டுமின்றி, காரைக்காலிலும் கிளை அமைந்துள்ளது. அடுத்து மாகி, ஏனாமிலும் ஜிப்மர் கிளை துவங்க ஆயத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதுபோன்ற சூழ்நிலையில், ஜிப்மர் மருத்துவமனையில் புதிய மருத்துவ பணியிடங்களை அதிகரிக்க ஜிப்மர் நிர்வாகம் முடிவு செய்து, அண்மையில் மத்திய சுகாதார அமைச்சகத்திற்கு கோப்பு அனுப்பியுள்ளது.

மொத்தம் 947 பணியிடங்களை புதிதாக உருவாக்க கோப்பு அனுப்பப்பட்டதில், 557 பணியிடங்களை உருவாக்க மத்திய சுகாதார அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது. இதில் அதிகபட்சமாக 400 செவிலியர் அதிகாரி பணியிடங்களை உருவாக்க அனுமதி தந்துள்ளது. மேலும் 36 சீனியர் உள்ளிருப்பு மருத்துவர்கள் பணியிடங்களையும், 50 ஜூனியர் உள்ளிருப்பு மருத்துவர்கள் பணியிடங்களையும் புதிதாக உருவாக்க அனுமதி அளித்துள்ளது.

இருப்பினும், ஜிப்மர் நிர்வாகம் அனுப்பிய சில முக்கிய பணியிடங்கள் உருவாகத்திற்கு மத்திய சுகாதார அமைச்சகம் நிராகரித்தும் உள்ளது.

குறிப்பாக 35 உதவி பேராசிரியர் பணியிடங்களை புதிதாக உருவாக்க அனுமதி கேட்டிருந்தது. அதனை மத்திய சுகாதார அமைச்சகம் ஏற்றுக்கொள்ளவில்லை.

இதேபோல் 20 உதவி நர்சிங் கண்காணிப்பாளர், 100 சீனியர் நர்சிங் அதிகாரி பணியிடங்களை உருவாக்க அனுமதி கேட்கப்பட்டது. இந்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக நிதி அமைச்சகம் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஸ்டெனோகிராபர் கிரேடு–1ல் 4 புதிய பணியிடங்களும், ஸ்டேனோகிராபர் கிரேடு–2ல் 8 புதிய பணியிடங்கள் உருவாக்க அனுமதி தரப்பட்டுள்ளது. ஜிப்மர் மருத்துவமனை நிர்வாகம் 35 எம்.எல்.டி., பணியிடங்களை உருவாக்க அனுமதி கேட்டதில், 18 பணியிடங்கள் புதிதாக உருவாக்க அனுமதி தரப்பட்டுள்ளது. டெக்னிக்கல் அசிஸ்டண்ட் 3, அனஸ்தீசியா டெக்னீஷியன் 10 உருவாக்க ஜிப்மர் நிர்வாகம் அனுமதி கேட்டதில், அனைத்து பணியிடங்களையும் புதிதாக உருவாக்க மத்திய சுகாதார அமைச்சகம் இசைவு தெரிவித்துள்ளது.

ஜிப்மர் மருத்துவமனைக்கு ஆண்டிற்கு 14 லட்சத்து 56 ஆயிரம் புற நோயாளிகளும், தினசரி 6 ஆயிரம் நோயாளிகளும் சிகிச்சைக்காக வருகின்றனர்.

சிறந்த சிகிச்சை கிடைப்பதால் புதுச்சேரி, தமிழகம் மட்டுமின்றி பல்வேறு மாநில நோயாளிகளும் குவிந்து விடுகின்றனர். அதிகரித்து வரும் நோயாளிகளை சமாளிக்க முடியாமல் மருத்துவமனையின் அனைத்து பிரிவுகளும் திணறிக்கொண்டு இருக்கின்றன.

எனவே புதிய பணியிடங்களை விரைவாக நிரப்ப ஜிப்மர் நிர்வாகம் முடிவு செய்து பணிகளை வேகப்படுத்தி வருகிறது.

3.7.2025 • Puducherry • Dinakaran

## 86 டாக்டர்கள், 400 செவிலியர்கள் உட்பட

# ஜிப்மர் மருத்துவமனையில் புதிதாக 557 பணியிடங்களுக்கு ஒப்புதல்

### ஒன்றிய சுகாதாரத்துறை நடவடிக்கை

**புதுச்சேரி, ஜூலை 3:** புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் 400 செவிலியர் அதிகாரி உள்ளிட்ட 557 பணியிடங்களை நிரப்ப ஒன்றிய சுகாதாரத்துறை ஒப்புதல் அளித்துள்ளது.

புதுச்சேரி ஜவகர்லால் முதுகலை மருத்துவகல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்( ஜிப்மரில்) நோயாளிகள் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. ஆட்கள் பற்றாக்குறை காரணமாக துரிதமான மருத்துவ சேவை கிடைக்காமல் பொதுமக்கள் அவதிக்குள்ளாகி வருவதாக புகார் எழுந்தது. இதையடுத்து கூடுதல் பணியிடங்களை உருவாக்க ஜிப்மர் நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வந்தது.

அதன்படி முதுநிலை உள்ளிருப்பு மருத்துவ அதிகாரி, இளநிலை உள்ளிருப்பு மருத்துவ அதிகாரி, செவிலிய கண்காணிப்பாளர், துணை செவிலியர் கண்காணிப்பாளர், செவிலயர் அதிகாரி, இளநிலை கணக்கு அதிகாரி, தனி செயலர், ஸ்டெனோகிராபர், ஸ்டோர் கீப்பர், மயக்கவியல் நிபுணர், சீனியர் லேப் டெக்னீசியன், பிசியோதெரபிஸ்ட் ரேடியாலஜிஸ்ட்,ரேடியோதெரபி, ஊட்டச்சத்து நிபுணர், முதுநிலை மருந்தாளுநர், மருத்தாளுநர், மக்கள் தொடர்பு அதிகாரி உள்ளிட்ட 947 பணியிடங்களை புதிதாக உருவாக்கக் கோரி ஜிப்மர் நிர்வாகம், ஒன்றிய சுகாதாரத்துறைக்கு முன்மொழிவினை சமர்ப்பித்திருந்தது.

ஜிப்மரின் பரிந்துரையை ஏற்றுக் கொண்ட ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சகம், முதுநிலை மருத்துவ அதிகாரி 36, இளநிலை மருத்துவ அதிகாரி-50, செவிலியர் கண்காணிப்பாளர்-1 செவிலியர் அதிகாரி-400, ஸ்டோனோ கிராபர்-நிலைI-4. ஸ்டேனோ கிராபர் நிலைII-8. மெடிக்கல் லேப் டெக்னாலஜிஸ்ட்-18 அனஸ்தீசியா டெக்னிக்கல் அசிஸ்டெண்ட்-3, அனஸ்தீசியா டெக்னீசியன் -10, ரேடியோகிராபி டெக்னிக்கல் சூப்பர்வைசர் -2, சீனியர் எக்ஸ்ரே டெக்னீசியன்-2, எஸ்ரே டெக்சனீசியன்-5, ரேடியோ தெரபி சீனியர் எஸ்ரே டெக்னீசியன் 2, ரேடியோதெரபி எக்ஸ்ரே டெக்னீசியன்-6 பெர்ப்யூனிஸ்ட் அசிஸ்டெண்ட் -2, கிளினிக்கல் பிசியாலஜிஸ்ட்-1, ஆடியோலஜி டெக்னிசியன்- 1, மருந்தாளுநர்-3, பல்சிகிச்சை டெக்னீசியன் நிலைI-1, மெடிக்கல் பிசிஸ்ட்-2, ஆகிய 557 பணியிடங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

விரைவில் இப்பணியிடங்கள் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிகிறது. மேலும் ஜிப்மருக்கு ஒப்புக்கொள்ளப்பட்ட பதவிகளின் ஊதிய நிலை, ஏற்கனவே உள்ள பதவிகளுக்கு இணையாக இருப்பதையும், அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு விதிகளின்படி மட்டுமே அனைத்து பதவிகளை, நிரப்புவதையும் உறுதி செய்ய வேண்டும். எதிர்காலத்தில் குரூப்- டி பணியிடங்கள் அனைத்தையும் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படவுள்ளதால், 521 பணியிடங்களை கலைப்பதற்கான உத்தரவினை ஒன்றிய சுகாதார அமைச்சகத்துக்கு விரைவில் அனுப்பி வைக்க வேண்டும் என ஒன்றிய சுகாதாரத்துறை சார்பு செயலர் ஓம்பிரகாஷ் குப்தா தெரிவித்துள்ளார்.